# அறுவடை மற்றும் பிற ஆசீர்வாதங்களைக் கொண்டாடுங்கள்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் H1b பாடத்தைப் படிக்கவும்.

**ஜெபம்:** "கர்த்தாவே, நீர் எங்களுக்கு அளித்த பல ஆசீர்வாதங்களுக்காக நன்றி கூற, எனக்கும் எனது மந்தைக்கும் உதவி செய்க!"

வட்டார பழக்க வழக்கங்களுக்கும் இருக்கும் நேரத்துக்கும் பொருத்தமான செயல்பாட்டை தெரிந்து கொள்க.

"கோதுமை அறுப்பின் முதற் பலனை செலுத்தும் ஏழு வாரங்களின் பண்டிகையையும், வருஷ முடிவிலே சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக" (யாத். 34:22).

1. **இதய பூர்வமான நன்றியறிதலை தேவனுக்குத் தெரிவிக்க உங்கள் மந்தைக்கு உதவி செய்ய ஆயத்தமாகுக.**

**பின்னணி:**

- தேவன் பண்டைய இஸ்ரவேலர்களை, வாரங்களின் பண்டிகையைக் கொண்டாடச் சொன்னார். பின்னாளில் இதுவே பெந்தெகொஸ்தே என்று அழைக்கப்பட்டது.
- கிறிஸ்துவின் விசுவாசிகள் தினமும் தேவனுக்கு நன்றி கூற வேண்டும். பழைய ஏற்பாட்டு வாரங்களின் பண்டிகையைப் போல உலகெங்கும் உள்ள விசுவாசிகள் ஆண்டுதோறும் பொதுவாக அறுவடை காலங்களில் தேவனுக்கு அவரது ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்தி பண்டிகை ஆசரிக்கிறார்கள்.



- பல சபைகள் பெந்தெகொஸ்தே பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் அறுப்பின் பண்டிகையாகக் கொண்டாடவில்லை. தேவன் பரிசுத்த ஆவியைப் பொழிந்து புதிய உடன்படிக்கையின் சமுதாயத்தை உருவாக்கியதை நினைவுகூர்ந்து அவர்கள் அதைக் கொண்டாடுகின்றனர். அதை ஆவியின் அறுவடை எனலாம். அயல்நாடுகள் பலவற்றிலும் சிதறிக் கிடந்த யூத விசுவாசிகளின் புதிய அங்கத்தை அன்று தேவன் ஒன்று சேர்த்தார்.
- எல்லா சமுதாயங்களும் ஏதோ ஒரு வகையான அறுப்பின் பண்டிகையைக் கொண்டாடி வருகின்றன. இந்தப் பண்டிகைகளின் போது மக்கள் கூடி தேவனை அவர் தந்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி கூறி துதிக்கின்றனர். சில கலாச்சாரங்களில் இது விக்கிரக வழிபாடாக இருந்தாலும் விசுவாசிகள் அதில் கலந்து கொண்டு மக்களின் கவனத்தைப் பொய் தெய்வங்களிடம் இருந்து மாற்றி ஒரே மெய்தேவனுக்கு நன்றி செலுத்த உதவுகின்றனர்.

யாத்திராகமம் 14:5–15:13 ல், தேவன் இஸ்ரவேலருக்கு என்ன செய்தார் என்பதையும், தனது நன்றியுணர்வை தெரிவிக்க மோசே பாடியதையும், தேவ மக்கள் நன்றி செலுத்த உதவியதையும் காண்க.

மிரியமும் மற்ற பெண்களும் நன்றி தெரிவித்துப் பாடியதை யாத் 15:14–21 ல் காண்க.

2. **வாரநாட்களில் செய்ய வேண்டியதை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.**

அதிகமாகக் குறை கூறி, தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்தும் பழக்கம் இல்லாத விசுவாசிகளை சந்திக்கவும். அவர்களோடு **ஜெபியுங்கள்.** தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டிய விஷயங்கள் குறித்து கலந்துரையாடுங்கள். தங்களுக்கு தேவன் செய்த எல்லாவற்றிற்காகவும் தினமும் நன்றி தெரிவித்து ஜெபிக்குமாறு உற்சாகப்படுத்துங்கள்.

தேவனுக்கு நன்றி அறிவிக்கும் ஒரு சிறப்பான விருந்தைத் **திட்டமிட்டு** நடத்தவும்.

உங்கள் பகுதியில், அறுப்பின் பண்டிகை பற்றிய ஏதாவது விழாக்கள் இருந்தால், அதில் கலந்து கொள்ளும் மக்கள், எல்லா நல்ல விஷயங்களுக்கும் ஆதாரம் ஒரே மெய் தேவனே என்று அறிந்து கொள்ள உதவுங்கள். தேசிய விடுமுறைகளுக்கும் இது பொருந்தும். அதில் கலந்து கொண்டு, அன்பான உறவுகளை விசுவாசிகள் வளர்க்கலாம். மேலும், பாவமான காரியங்களுக்கு பதில் விசுவாசத்தின் சாட்சிகளையும், நேர் மறையான தாக்குறவுகளையும் (influences) உருவாக்கலாம்.

**கலாச்சார விழாக்களையும் கிறிஸ்தவர்கள் ஏற்கும் விழாக்களாக** மாற்ற பின்வரும் முறைகளை கடைபிடிக்கவும்.

- இந்த விஷயத்தைக் குறித்து விவாதிக்க சில ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரை ஒன்று திரட்டவும்.
- கலாச்சார நிகழ்ச்சியின் பழக்கவழக்கங்கள், குறியிடுகள், அர்த்தங்கள் ஆகியவற்றைப் பற்றிய ஒரு பட்டியலை தொகுக்கவும். (இந்தப் பட்டியலைத் தொகுக்க சில விசுவாசிகள் அல்லாதவர்களின் உதவியையும் நாடலாம்).
- கீழ்வரும் மூன்று கேள்விகளுக்கான பதிலையும் விவாதிக்கவும்.

## கலாச்சார ஒப்புரவு கேள்விகள் (Cultural Adjustment Questions):

1) நிகழ்ச்சியின் எப்பகுதிகள் தேவனும் பெரும்பாலான கிறிஸ்தவர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை?
2) நிகழ்ச்சியோடு ஒத்துப்போகும் வேதாகமக் கதைகளும் போதனைகளும் எவை?
3) நிகழ்ச்சியின் எப்பகுதி வேதாகம சத்தியத்தால் மாற்றியமைக்கப்பட வேண்டும்?

- கலாச்சாரத்துக்கும், ஒரே மெய் தேவனுக்கும் மரியாதை செய்யும் வகையில் நிகழ்ச்சிகளை எவ்வாறு நடத்தலாம் என்பது குறித்து திட்டமிடவும்.
- கலாச்சார நிகழ்ச்சியின் கிறிஸ்தவ வடிவத்தை நிகழ்த்தும் போது விசுவாசிகள் அல்லாத சிலரையும் அழைக்கவும். பின்னர் அதைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் கேட்டறியவும். கிறிஸ்தவ வடிவத்தை ஒருவேளை மாற்றி அமைக்க வேண்டி இருக்கலாம்.

**உதாரணமாக:**

- குழந்தைப் பேற்றிற்காக மக்கள் ஓர் ஆவியை நோக்கி வேண்டுதல் செய்வது போல் கலாச்சார நிகழ்ச்சியின் காட்சிகள் இருந்தால், இயேசுவின் நாமத்தினால் தேவனை நோக்கி ஜெபிப்பதாக அமைக்கவும். ஒன்பது மாதம் கழித்து வேண்டுதல் செய்த தாய்மாருக்கு குழந்தைகள் பிறப்பதாக காட்சியை அமைக்கவும்.
- இளம் வாலிபர்களுக்கு தீட்சை (initiaion) கொடுக்கும் நிகழ்ச்சிகளில் புறஜாதியாரின் பழக்க வழக்கங்களும், சில ஒழுக்கக் கேடான விஷயங்களும் இருந்தால், தீட்சையைக் கண்டிக்காமல், தேவனைப் போற்றும் விதமாகவும், கலாச்சார உயர்வுகளையும் இளம் வாலிபரின் நன்னடத்தையைப் பேணும் வகையிலும் மாற்றி அமைக்கவும். புறஜாதியார் கூட அப்போது கிறிஸ்தவ முறையில் தீட்சை கொடுப்பதை விரும்புவர்.
- ஒரே தெய்வத்தை நோக்கி மக்கள் ஜெபிக்கும் போது, கிறிஸ்தவர்கள் இயேசுவின் நாமத்தில் தொடர்ந்து அதை செய்யவும். தேவன் பதிலளிப்பதை அவிசுவாசிகளும் உணர்ந்து விசுவாசிகள் ஆகலாம்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்

தேவன் இஸ்ரவேல் மக்களை அதிசயமாக எகிப்திய இராணுவத்திடம் இருந்து மீட்டுக் கொண்டதையும், நன்றி கூறி கொண்டாட மோசேயும் அவன் சகோதரி மிரியமும் மக்களுக்கு உதவியதையும் யாத்திராகமத்தில் இருந்து **வாசிக்கவும்** அல்லது நடித்துக்காட்டவும்.

நட்புறவை வளர்க்கவும், ஆவிகளுக்கும் விக்கிரகங்களுக்கும் படைக்கப்படும் காணிக்கைகளுக்குப் பதிலாக ஒரே மெய் தேவனுக்கு துதியோடு படைக்கும்படியாக மாற்றி அமைக்கவும் விசுவாசிகள் அறுவடை விழாக்களில் எவ்வாறு கலந்து கொள்ள வேண்டும்.

தேவனிடம் இருந்து தாங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களைக் குறித்து சாட்சியோடு விசுவாசிகள் நன்றியும் கூறவும்.

**குழந்தைகள்** தாங்கள் தயாரித்தவற்றை வழங்கட்டும்.

யோவன் 6:47-51 ஐ வாசித்து கர்த்தரின் **பந்தியை அறிமுகம் செய்க.**

ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும், தேவனுக்கு நாம் ஏன் நன்றி செலுத்த வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்கவும், நன்றியறிவிக்கும் நிகழ்ச்சிகளைத் திட்டமிடவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய சிறு குழுக்களை அமைக்கவும்.

**மனப்பாடம்:** சங். 69:30.



Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net